செய்தி வெளியீடு எண் :1057 நாள்: 27.06.2022

**செய்தி வெளியீடு**

இன்று 27.06.2022ம் தேதி மாலை சுமார் 05.30 மணி அளவில் கோவை வனக் கோட்டம் போளுவாம்பட்டி வனச்சரகம், போளுவாம்பட்டி பிளாக் II காப்புக்காடு, வெள்ளபதி பிரிவு, முள்ளாங்காடு சுற்றுக்கு உட்பட்ட சாமி முடி சராக பகுதியில், சிறுவாணி அடிவாரம், TWAD BOARD குடியிருப்பில் வசித்து வந்த சிறுவாணி அடிவாரம் TWAD BOARD குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பணிபுரியும் பராமரிப்பு உதவியாளரான காளிதாஸ் த/பெ ராமன் வயது சுமார் 59, என்பவரை சாடிவயல் சோதனை சாவடியில் இருந்து சிறுவாணி அடிவாரத்தில் உள்ள அவரது குடியிருப்பிற்கு TN 37 AW 9229 என்ற பதிவு எண் கொண்ட splendor plus இருசக்கர வாகனத்தில் செல்லும் போது வழியில் குடியிருப்பிற்கு 01 கி.மீ முன்பாகவே சாலையோரத்தில் சர்க்கார் போரத்தி பேருந்து நிறுத்தத்திலிருந்து 100மீ மேற்கு திசையில் சாமி முடி சராக பகுதியில் ஒற்றை காட்டு யானை தாக்கியதில் படுகாயம் அடைந்தார். அவரை உடனடியாக மீட்டு காருண்யா சீசா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது. அவரை பரிசோதித்த மருத்துவர் அவர் இறந்துவிட்டதாக கூறினார். பின்னர் காருண்யா காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவரது உடல் பரிசோதனைக்காக கோவை அரசு கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இவருக்கு சீபா சுமார் வயது 49.மனைவியும், அகில் சுமார் வயது 25 மற்றும் அஜித் சுமார் வயது 23 என்ற இரு மகன்களும் உள்ளனர்.

அரசு நிவாரண உதவி ரூ 5.0 இலட்சம் உடன் வழங்க வனத் துறை மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in